**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.121/2024**
**வழக்கு சாட்சி PW.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.T.கார்த்திக் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : காளியாத்தாள் | தொழில் | : அரசு பள்ளி ஆசிரியை |
| தகப்பனார் பெயர் | : நாச்சிமுத்து | கணவர் பெயர் | : திருநாவுக்கரசு |
| கிராமம் | : ஐ.ஆலமரத்துபட்டி | வயது | : சுமார் 57 |
| தாலுக்கா | : கரூர் | நாள் | : 10.03.2026 |
| மாவட்டம் | : கரூர் | | |

<u>பிரதிவாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் தொடர்ச்சியான குறுக்கு விசாரணை</u>

நானும், எனது சகோதரரும் எங்களுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்களை சேர்ந்து தான் விற்பனை செய்தோம் என்றால் ? சரிதான். சொத்துக்களை விற்பனை செய்த போது ஊராட்சிமன்ற தலைவர் நாட்டுத்துரை வழியாக சொத்தினை விற்பனை செய்வதற்கான பேசி சொத்தினை விற்பனை செய்தோம் என்றால் ? ஆமாம். ஊராட்சிமன்ற தலைவர் நாட்டுத்துரை விற்பனை செய்த கிரைய ஆவணத்தில் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார் என்றால் ? சரிதான். ஊராட்சிமன்ற தலைவர் நாட்டுத்துரை வழியாக கிரையம் செய்தபோது தொகை ரூ.7,00,000/- பெற்றேன் என்றால்? இல்லை. ஊராட்சிமன்ற தலைவர் நாட்டுத்துரை என்பவரை விசாரிக்க எனக்கு ஆட்சபேனை இல்லை என்றால் ? எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. பணம் எதுவும் நான் வாங்கவில்லை. அதனால் தான் செட்டில்மெண்ட் எழுதி வைத்தார்கள். பணத்திற்காக வேண்டி தான் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்தார்கள் என்று நான் வழக்கு நடத்தி வருகிறேன் என்றால் ? ஆமாம். அதற்கான தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? ஆமாம். கிரைய ஆவணமானது 14.12.2023ம் தேதி எழுதப்பட்டது என்றால் ? சரிதான். நான் சொல்லியுள்ள தானசெட்டில்மெண்ட் பத்திரமானது 18.12.2023ம் தேதி எழுதப்பட்டுள்ளது என்றால் ? ஆமாம். செட்டில்மெண்ட் பத்திரத்தின் திருத்தல்

ஆவணம் 19.12.2023ம் தேதியில் எழுதப்பட்டது என்றால்? சரிதான். 18.12.2023ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தை படித்து பார்த்துள்ளனோ என்றால்? ஆம். படித்து பார்த்தேன். 18.12.2023ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தை ஏற்றுக்கொள்கிறேன் என்றாலும், 19.12.2023ம் தேதியிட்ட பிழைதிருத்தல் செட்டில்மெண்ட் ஆவணத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும் ? சரிதான். 18.12.2023ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தில் கீழ் கண்ட சொத்தானது நமது குடும்பத்தார் மட்டும் அனுபவிக்கும்விதமாக தாங்கள் பினவரும் காலங்களில் தங்களால் கிரையம் செய்து கொடுக்கும் நிலையில், எனக்கோ அல்லது என்னுடைய வாரிசுகளுக்கோ அன்றைய சந்தை மதிப்பில் கிரையம் செய்து கொடுத்துவிட வேண்டியது என்று சரத்துக்கண்டு செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால்? சரிதான். 19.12.2023ம் தேதி திருத்தல் பத்திரம் பதிவு செய்யப்பட்டதில், பக்கம் 3ல்," உங்களது ஆயுள்காலம் வரை இந்த சொத்துக்களை ஆண்டு அனுபவித்து வந்தும், உங்களது ஆயுள்காலத்திற்கு பின்னிட்டு எனக்கோ அல்லது என்னுடைய மகன் கலாநிதிக்கோ சேர வேண்டியது என்றும், தொடர்ச்சியாக வேறு நபர்களுக்கு வில்லங்கம் ஏற்படுத்தும் விதமாக எவ்வித வில்லங்க பதிவு மேற்கொள்ளக்கூடாது" என்று சரத்துக்கண்டு பிழைத்திருத்தல் ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால் ? சரிதான். 18.12.2023ம் தேதியிட்ட பத்திரத்தை பிரதிவாதியிடம் இருந்து 04.01.2024ம் தேதி பெற்றுக்கொண்டேன் என்றால் ? சரிதான். 19.12.2023ம் தேதியிட்ட பத்திரத்தை நான் பெற்றுக்கொள்ளவில்லை. தாவா சொத்துக்களுக்கு தொடர்ந்து பிரதிவாதி பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் ? சரிதான். நான் தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை ஏற்றுக்கொள்ளாத நிலையில் தாவா சொத்துக்கள் தொடர்ந்து பிரதிவாதியே அனுபவித்து வருகிறார் என்றால் ? சரியல்ல. ஒரு சொத்தினை ஒரு நபர் மற்றொரு நபருக்கு தானமாக கொடுக்கும்போது, சொத்தினை கொடுக்கக்கூடிய நபர் அவருடைய விருப்பத்தின் பேரில் தான் சொத்தினை தானமாக வழங்குகிறார் என்றால் ? ஆமாம். நான் சொல்வது போல் பணத்திற்காக சொத்தினை தானமாக எழுதிக்கொடுக்க இயலாது என்றால்? சரியல்ல. 18.12.2023ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் ஆவணத்தை திருத்தவோ, மாற்றவோ செய்யக்கூடாது என்று கண்டுள்ள வாசகமானது தட்டச்சு பிழையால் ஏற்பட்டது என்றால் ? சரியல்ல. அதனால் தான் அதே ஆவணத்தில் பின்னிட்டு நிபந்தனைகள் குறிப்பிட்டு தான் ஆவணம் ஏற்பட்டுள்ளது என்றால் ?

சரியல்ல. 18.12.2023ம் தேதியிட்ட ஆவணத்தை மட்டும் நான் ஏற்றுக்கொண்டு விட்டு 19.12.2023ம் தேதியிட்ட ஆவணத்தை நான் ஏற்றுக்கொள்ள இயலாது என்று சொல்ல முடியாது என்றால் ? சரியல்ல. சொத்தினை விற்பனை செய்தபோதே நான் சொத்திற்கான தொகையினை பெற்றுக்கொண்டு தான் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் ? சரியல்ல. கிரையம் செய்தபோது தொகையை பெற்றுக்கொண்டுவிட்டு தற்போது வழக்கிற்காக வேண்டி தொகையை பெற்றுக்கொள்ளவில்லை என்று சொல்கிறேன் என்றால் ? சரியல்ல. கிரைய ஆவணமானது உரிய சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ள கிரைய ஆவணம் என்றால் ? ஆமாம். கிரைய ஆவணத்தை நான் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன் என்றால் ? சரிதான். எனது சகோதரர் எனக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை பொறுத்து எந்தவித கேள்வியும் எழுப்ப எனக்கு உரிமை இல்லை என்றால் ? சரியல்ல. நான் வழக்கில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் ? சரியல்ல.

Takendown by me in opencourt and
Readover by me and acknowledged
by him/her to be correct.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.03.09 19:02:15 +0530

Sub Judge,
Oddanchatram